04.06.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.6/2026</u>

அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருள் | | |
| த/பெ | சுந்தரம் | | |
| கிராமம் | திருவெண்ணைநல்லூர் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 49/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 04.06.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 விசாலம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், விசாரணையில் நான் கடந்த 22.06.2021 ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன்

கிருஷ்ணராஜ் என்பவரும், மணக்குளவிநாயகர் மருத்துவமனை அருகில் நின்றுகொண்டிருந்தோம் என்றும், அப்போது விஷால் என்பவர் TN-33- BP – 2446 என்ற வாகனத்தில் வந்துகொண்டிருந்தார் என்றும், அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த அருள், அருண் இருவரும் விஷால் வந்த இருசக்கர வாகனத்தை மறித்தார் என்றும், வாகனத்தின் சாவியை பிடுங்கிக்கொண்டார் என்றும், அந்த நேரத்தில் அங்கு வந்த PY-05-E-2507 என்ற பளினோ என்ற காரில் பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த விழுப்புரத்தை சேர்ந்த கோவிந்தராஜ் மகன் மிதுன், பக்கிரிசாமி மகன் கனேஷ், செல்வராஜ் மகன் இமான், கதிரேசன் மகன் விமல் மற்றும் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத நபர் அந்த வாகனத்தில் இருந்தனர் என்றும்,அருள் மற்றும் அருண் இருவரும் சேர்ந்து விஷாலை இழுத்து காரில் போட்டுக் கொண்டார்கள் என்றும் போலீசார் விசாரனையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. மறுநாள் 23 ம் தேதி அழைத்துச் சென்று விஷாலும் காரில் வைத்து தாக்கி பின்பு அங்கிருந்து தப்பித்து சென்ற விவரம் பற்றி நான் கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரனையில் சொன்னேனா என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை